**கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, ஜர்னல், ஜர்னல் வவுசர்,கொடுப்பனவு வவுசர் போன்றன பிரதாக கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் கோட்பாடுகளிற்கு முரணாக கொடுக்கல் வாங்கல்களை பிரதியிடும் போது தெளிவற்ற மற்றும் முறையற்றதாக பிரதான பேரேடு மற்றும் கணக்குப் புத்தகங்களை பேணியிருந்ததுடன் கொடுக்கல் வாங்கல்களிற்குரிய வவுசர் இலக்கம், காசோலை இலக்கம் போன்ற விபரங்களை அழித்து மாற்றம் செய்து வெளிப்படைத் தன்னை இன்றி காசு புத்தகம் மற்றும் செலவு பதிவேடு பேணப்பட்டிருந்து. | தற்போது அத்தவறுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் கோட்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் ஏற்பாடு செய்திருக்க்காததால் மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரிய ரூபா 52,362 ஆன வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது வட்டி வருமானத்தை செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 958,571 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 275,050 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 683,521 ஆன வளரச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளச்சிக்கு கல்வி மற்றும் கலாசாரத்திற்கு உதவும் செலவினங்கள் ரூபா 1,746,969 இனால் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்காக அரச ஏற்பாடுகளிற்கு மேலதிகமாக, உள்நாட்டு அல்லது வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் மானியம், அன்பளிப்பு அல்லது கொடை, மாற்றப்பட்ட அல்லது திரட்டப்பட்ட தொகை மற்றும் நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் அல்லது நிதியத்திற்கு அறவிட வேண்டிய அல்லது ஏனை நிதியின் மூலம் நிதியத்தை பெற்றுக் கொள்ள 1992 இன் 09 இலக்க கட்புலனற்றோரை புனர்வாழ்வு செய்யும் நம்பிக்கை நிதியத்தின் 07 பிரிவு பிரகாரம் சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதும் நிதியத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு வரை 29 ஆண்டு காலப் பகுதியினுள் நிதியத்தை வளர்த்துக் கொள்வதற்காக அரச மானியங்களிற்கு மேலதிகமாக ஏனைய நிதி மூலங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அல்லது அதற்காக எதிர்காலத் திட்டமொன்றேனும் திதியத்திடம் இருக்கவில்லை. | நிதியத்திற்காக வருமானம் ஈட்டும் நடவடிக்கைக்காக சீதுவ தொழிற் கல்வி பயிறச்சி நிறுவனத்தினுள் நடாத்திச் சென்ற கற்புலனற்றோர் மாதர் நலன்புரி மத்திய நிலையத்தின் கையியந்திர நெசவுப் பிரிவு நட்டமடையும் நிலைமையில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023 ஆண்டில் நிதி திரட்டும் நோக்கில் உண்டியல் இஸ்தாபிக்கும் வேலைத் திட்டமொன்றை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நிதியத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தின் நோக்கம் மற்றும் எதிர்பார்புகளை அடைந்து கொள்வதற்கான<br><br>➢ கற்புலனற்றோர்களுக்காக தொழில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல். | ஊனமுற்றவர்களுக்கான தேசிய பொது செயலகத்தின் மூலம் கற்புலனற்றோர் உள்ளடங்களாக அனைத்து ஊனமுற்றவர்களிற்காக சுயதொழில் உதவி வழங்கும் வேலைத் திட்டமொன்று செயற்படுவதால் நிதியத்தினால் சுயதொழில் உதவி வழங்கும் வேலைத் திட்டத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பேணிச் சென்ற சுயதொழிலிற்காக தடை ஏற்பட்ட 20 கற்புலனற்றோர்களுக்கு விஷேட சந்தர்ப்பமாகக் கருதி சுயதொழில் உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நோக்கத்துடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ➢ கற்புலனற்றோர்களுக்காக கலைதுறை பாடநெறியை பின்பற்ற அல்லது தொழில் பயிற்சியை பெற்றுக் கொள்ள முடியுமானவாறு வீட்டு வசதி வழங்கல். | சமூக சேவைத் திணைக்களத்தின் தொழல் பயிற்சி மத்திய நிலையத்தின் ஊடாக அவர்களுக்குகாக இலவசமாக தங்குமிட வசதி வழங்கப்படுவதால் தற்போதளவில் அவ்வாறான தேவைப்பாடு ஏற்படவில்லை. | நோக்கத்துடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ➢ கற்புலனற்றோர் உற்பத்தி செய்யும் பண்டங்களிற்காக விற்பனை வசதிகளை வழங்குதல். | கற்புலனற்றோர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவது பிரதேச மட்டத்திலான சிறிய அளவிலாகும். அதற்காக அவர்களால் இனங்கண்ட சந்தையொன்றின் மூலம் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அநேக கற்புலனற்ற நபர்களினால் மேற்கொள்ளப்படுவது சாதாரண சந்தையூடாக சிறியளவிளான இருப்புக்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதாகும். | நோக்கத்துடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ➢ சமமான உரிமைகள் மற்றும் சமமான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்வதனை தடை செய்யும் நிலைமையை இல்லாது | கற்புலனற்றோர் புனர்வாழ்வு நிதியத்தினூடாக செயற்படுத்தப்படும் ஒவ்வொறு வேலைத் | நோக்கத்துடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் போன்ற செயற்பாடுகளிற்காக வேலைத் திட்டம் மற்றும் கருத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தி இருக்கவில்லை. | திட்டத்தினூடாவும் கற்புலனற்றோர்களின் சமமான உரிமைகள் பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்தி செயற்படுத்தப்படுகின்றது. | |
| (இ) | முதலாம் ஆண்டு முதல் க.பொ.த (சா.த) வரை கல்வி கற்கும் குழந்தைகள், உயர்தரம் கற்கும் குழந்தைகள், கல்கலைக்கழக குழந்தைகள் மற்றும் லுவீ பிறேல் எனும் பெயரில் கற்புலனற்ற பெற்றோர்களின் (கற்புலனுள்ள குழந்தைகளுக்கு கல்வி உதவியாக புலமை பரிசில் வழங்கும் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டு இருந்தது) அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் இலக்கு வைக்கப்பட்ட 401 நபர்களில் 368 மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்க ரூபா 5,279,586 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொண்ட மாதிரி பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| I. | முழு நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் கற்புலனற்ற குழந்தைகளை இனங்காண்பதற்குரிய தரவுத் தொகுதியொன்றை பேணியிருக்கவில்லை. | தேவையான நிதி, பௌதீக மற்றும் மனிதவளம் நிதியத்திடம் இருக்கவில்லை. தரவுத் தொகுதி ஒன்றிற்காக தரவுகளை திரட்டும் போது அதற்காக கணிப்பீட்டு அலுவலர்களை விஷேடமாக பயிற்றுவிக்க வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல் வளங்களின் மட்டுப்படுத்தல் காரணமாக கற்புலனற்றோர் புனர்வாழ்வு பொறுப்பு நிதியத்திற்கு கடினமாக செயலொன்றாகும். | கற்புலனற்ற மக்களை இனங்காண்பதற்குரிய தரவுத் தொகுதியொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| II. | புலமை பரிசில் வழங்க குழந்தைகளை தெரிவு செய்யும் அடிப்படை, தேவையான தகைமை, முன்னுரிமை வழங்கல், வழங்கும் புலமை பரிசில் பெறுமதி போன்ற பிரமாணங்கள் உள்ளிட்ட புலமை பரிசில் வழங்கும் | புலமை பரிசில் வழங்கும அடிப்படையாவது கற்புலனற்ற நபரொருவராக இருத்தல், கற்புலனற்ற பெற்றோர்களின் கண்கள் பார்வையுள்ள குறைந்த வருமானமுள்ள குழந்தைகளாக இருத்தல். வழங்கும் புலமை பரிசில் | புலமை பரிசில் வழங்கும் முறையான பிரமாணங்களை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தேச முறையொன்றை திட்டமிட்டு செயற்படுத்தி இருக்கவில்லை. | பெறுமதி காலத்திற்கு காலம் கற்புலனற்றோர் புனர்வாழ்வு நிதியத்தின் முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும். | |
| III. | புலமை பரிசில் தாரர்களை தெரிவு செய்த முறைமை தொடர்பான தகவலகள் கணக்காய்விற்கு வழங்காத காரணத்தால் அந்த நடவடிக்கைகள் சரியாக மற்றும் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டனவா என கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | 2022 ஆண்டு வரை கற்புலனாகாதவர் என உறுதி ஆகும் குறைந்த வருமானமுள்ள அனைத்து விண்ணப்பதாரருக்கும் புலமை பரிசில் வழங்க நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக தெரிவு செய்யும் முறைமை தொடர்பாக பிரச்சினை ஏற்படவில்லை. | கணக்காய்விற்கு உறுதி செய்து கொள்ள போதிய சான்றுகளை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| IV. | மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் 158 புலமை பரிசில் தாரர்களுக்கு ரூபா 735,000 ஆன புலமை பரிசில் வழங்கப்பட்டுள்ளதுடன் 115 புலமை பரிசில் தாரர்கள் பெற்றுக் கொண்ட ரூபா 507,000 தொகையை உறுதி செய்து கொள்ள பற்றுச் சீட்டுக்ளை நிதியத்திற்கு வழங்கியிருக்கவில்லை. அதன் பிரகாரம் புலமை பரிசில் வழங்கும் முறைமை தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு பலவீன தன்மையுடன் காணப்படுவதாக கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | 2023 ஆண்டு முதல் இந்த தவறு சரிசெய்யப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு உறுதி செய்து கொள்ள போதிய சான்றுகளை சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கற்புலனற்ற திறமையான குழந்தைகளின் ஆரம்ப கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தரம் 05 புலமை பரிசில் சித்தியடைந்த கற்புலனற்ற திறமையான குழந்தைகளிற்கு புலமை பரிசில் வழங்கும் வேலைத் திட்டமொன்றை நோக்கி கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கட்புலனற்றோர் புனர்வாழ்வு பொறுப் நிதியத்தின் அனைத்து புலமை பரிசில் வேலைத் திட்டங்களையும் ஒரே முறையில் ஆரம்பித்து செயற்படுத்தி இருக்கவில்லை. அது காலத்திற்கு ஏற்றவாறு படிப்படியாக முன்னேற்றம் அடைந்ததாகும். | தரம் 05 புலமை பரிசில் சித்தியடைந்த கற்புலனற்ற திறமையான குழந்தைகளிற்கு புலமை பரிசில் வழங்கும் வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (உ) | கட்புலனற்ற மக்களின் புனர்வாழ்விற்காக மற்றும் நலன்புரிக்கான வேலைத் திட்டம் மற்றும் கருத்திட்டத்தை தேசிய மட்டத்தில் வெளிப்படை தன்மையாக | கட்புலனற்ற நபர்கள் உள்ளிட்ட அனைத்து ஊனமுற்றவர்கள் தொடர்பாக தகவல் தொகுதியொன்றை தயாரிக்க | கட்புலனற்ற மக்களின் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் |

| | | |
|---|---|---|
| மற்றும் முறையாக செயற்படுத்த கட்புலனற்ற மக்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியான பரவல், வயதுக் கட்டமைப்பு, கட்புலனற்ற நிலைமை, பொருளாதார நிலைமை போன்ற தகவல்களை அறிந்து கொள்வது முக்கியமானதாகும், அதனூடாக குறிப்பான, சரியாக மற்றும் ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுக்க இலகுவாகும். எனினும் கட்புலனற்ற மக்களின் அவ்வாறான தகவல்கள் உள்ளடங்கிய தொகுதியொன்றை தயாரிக்க எவ்வித முயற்சியும் எடுத்திருக்கவில்லை. | சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் பணிகளிற்காக அந்த தரவுகள் மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட எதிர்பார்க்கிறேன். | தொகுதியொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதியத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளாமை, அதற்கிணங்க ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்துக் கொள்ளாமை, ஆட்சேர்ப்பு திட்ட பிரகாரம் ஆட்சேர்க்கப்படாததால் நிதியத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான கடமை பணிகளை மேற்கொள்வது மற்றும் அதனூடாக எதிர்பார்த்த செயலாற்றுகையை பேணிக் கொள்வது தொடர்பில் பாதகமான தாக்கம் செலுத்தியிருந்தது. | நிதியத்தின் நிதி நிலைமையை அதிகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறாயினும் தேவையான ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்து தேவையான ஆட்சேர்ப்பை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். | கடமைப் பணிகளை நிறைவேற்ற போதிய பதவியணியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |